திருவாசகம் - 32



# பிரார்த்தனைப்பத்து கதைவழிவில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# பிரார்த்தனைப்பத்து கதை வடிவில்

## சதாமுத்தி

## திருப்பெருந்துறையில் அருளியது

பிரார்த்தனை இரு வகைப்படும். ஒன்று காமியப் பிரர்த்தனை. மற்றது நிஷ்காமியப் பிரார்த்தனை. ஆயுள், ஆரோக்கியம், உலக விடயங்கள், சுவர்க்கம் சம்பந்தமான பிரச்சினைகள் காமியப் பிரார்த்தனையில் அடங்குகின்றன. சிவனின் அருள், பக்தி, வைராக்கியம், விவேகம், முத்தி ஆகியன நிஷ்காமியப் பிரார்த்தனையில் அடங்குகின்றன. ஆத்மவிடுதலையை விரும்புவோர் காமியப் பிரார்த்தனையைச் செய்யக்கூடாது. அவர்கள் நிஷ்காமியப் பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

**கலந்து நின்னடி யாரோ டன்று வாளா களித்திருந்தேன்**

**புலர்ந்து போன காலங்கள் புகுந்துநின்ற திடர்பின்னாள்**

**உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பச்**

**சுடர்காண்பான் அலர்ந்து போனேன் அருள்செய்யாய் ஆர்வங்**

**கூர அடியேற்கே. 01**

"சிவனே, அன்று உனது அன்பர் கூட்டத்துடன் இருந்தபோது என்னை மறந்து இன்பமாக இருந்தேன். இனிமையான அந்தக்காலம் கடந்து போய்விட்டது. உனது பேரொளியில் கலக்க ஆசைப்படுகிறேன். அதனால் உனது அருளை நான் மேலும் மேலும் நான் நாட எனக்கு அருள் செய்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சிவனை வேண்டுகிறார்.

**அடியார் சிலருன் அருள்பெற்றார் ஆர்வங் கூர யான் அவமே**

**முடையார் பிணத்தின் முடிவின்றி முனிவால் அடியேன்**

**மூக்கின்றேன் கடியேனுடைய கடுவினையைக் களைந்துன்**

**கருணைக் கடல்பொங்க உடையாய் அடியேன் உள்ளத்தே**

**ஓவா துருக அருளாயே 02**

“சிவனே, உன்னை நாடிய அடியார்கள் பலர் உன்னை அடைந்து விட்டனர். ஆனால் நான் வினையைப் பெருக்கிவிட்டேன். அத்தகைய எனக்கு உன்னை அடையும் வழியைக் காட்டியருள்” என்கிறார் மாணிக்காசகர்.

**அருளா ரமுதப் பெருங்கடல்வாய் அடியா ரெல்லாம் புக்கழுந்த**

**இருளா ராக்கை யிதுபொறுத்தே எய்த்தேன் கண்டாய்**

**எம்மானே மருளார் மனத்தோர் உன்மத்தன் வருவாய்**

**என்றிங் கெனைக்கண்டார் வெருளா வண்ணம் மெய்யன்பை**

**உடையாய் பெறநான் வேண்டும்மே. 03**

“சிவனே, உன்னை நாடிய அடியார்கள் எல்லோரும் உனது அருட்கடலில் மூழ்கி ஆனந்தப்படுகின்றனர். ஆனால் நான் இந்த உடம்பின் நலத்தைக் கவனித்துக் களைத்துப் போனேன். நான் மெய்யடியானாகாவிட்டால் மருள்ப் பித்தனாக மாறிவிடுவேன். அந்த நிலை எனக்கு வேண்டாம். என்னை உன்னோடு சேர்த்துவிடு இறைவா” என்று சிவனை இரக்கிறார் மாணிக்கவாசகர்.

**வேண்டும் வேண்டும் மெய்யடியா ருள்ளே விரும்பி எனை**

**அருளால் ஆண்டாய் அடியேன் இடர்களைந்த அமுதே அருமா**

**மணிமுத்தே தூண்டா விளக்கின் சுடரனையாய்**

**தொண்டனேற்கும் உண்டாங்கொல் வேண்டா தொன்றும்**

**வேண்டாதுமிக்க அன்பே மேவுதலே 04**

“சிவனே, உன்னை நாடவேண்டுமானால் உனது அருளையே நாடவேண்டும். சிவனடியார்களின் கூட்டத்தில் என்னைச் சேர்த்து வைத்தாய். நீ சோதிப்பிழம்பான தெய்வம். உன்னை அடைவதற்கு உதவாத உலக நாட்டத்தை வேண்டாம் என்று நிராகரித்துவிட்டு நான் உன்னையே வேண்டுகிறேன்” என்கிறார் மாணிக்காசகர்.

**மேவும் உன்றன் அடியாருள் விரும்பி யானும் மெய்ம்மையே**

**காவி சேருங் கயற்கண்ணான் பங்கா உன்றன்**

**கருணையினால் பாவியேற்கும் உண்டாமோ பரமா னந்தப்**

**பழங்கடல் சேர்ந் தாவி யாக்கை யானென்தன் றியாது மின்றி**

**அறுதலே. 05**

“சிவனே, மீனின் வடிவத்தையும், கருங்குவளைப் பூவின் நிறத்தையும் உடைய கண்களை உடைய பராசக்தியின் மணாளனே, உனது அடியார்கள் எல்லோரும் உனது திருவருளில் ஒன்றாகினர். நானும் அதில் எனது சீவவியத்தியை அவ்வாறு அழித்தொழிப்பேனாக” என்கிறார் மாணிக்கவாசகர்.

**அறவே பெற்றார் நின்னன்பர் அந்தமின்றி அகநெகவும்**

**புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றேன் உடையானே**

**பெறவே வேண்டும் மெய்யன்பு பேரா ஒழியாய் பிரிவில்லா**

**மறவா நினையா அளவில்லா மாளா இன்ப மாகடலே 06**

“சிவனே, பிரளயத்தின்போது உன்னிடமே யாவும் ஒடுங்குகின்றன. ஆனல் நீ எதிலும் ஒடுங்குவதில்லை. அத்துடன் பிரிவதும் இல்லை. அப்படிப்பட்ட உனது நிலையில் உள்ள சிவானந்தமானது யாவற்றிற்கும் அப்பாற்பட்ட பரமானந்தப் பெருநிலையாகும். சிவபக்தர்கள் அப்பெருநிலையை அடைகின்றனர். பரமனை அடைய முயல்கின்ற எனக்கு அது வாய்க்க வேண்டும்.” என்று மாணிக்கவாசகர் பிரார்த்திக்கிறார்.

**கடலே அனைய ஆனந்தக் கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண**

**இடரே பெருக்கி ஏசற்றிங் கிருத்த லழகோ அடிநாயேன்**

**உடையாய் நீயே அருளிதியென் றுணர்த்தா தொழிந்தே**

**கழிந்தொழிந்தேன் சுடரார் அருளால் இருள்நீங்கச் சோதி**

**இனித்தான் துணியாயே. 07**

“சிவனே, உனது அடியார்கள் அனைவரும் உனது பேரானந்தக் கடலில் திளைத்திருக்கின்றனர். ஆனால் நான் இந்நிலவுலகில் துன்பத்தைப் பெருக்கி இளைத்திருப்பது என்ன நியாயம்..? நீ என்னை வலிய வந்து ஆட்கொள்வாயென்று நான் இதுவரைக்கும் பிரார்த்தனை செய்யவில்லை. இப்போதுதான் பிரார்த்திக்கத் தோன்றுகிறது. அதனால் பிரார்த்திக்கிறேன். என்னை ஆண்டருள்” என்று மாணிக்கவாசகர் சிவனை இரக்கிறார்.

**துணியா உருகா அருள்பெருகத் தோன்றும்**

**தொண்டரிடைப்புகுந்து திணியார் மூங்கிற் சிந்தையேன்**

**நின்று தேய்கின்றேன் அணியா ரடியா ருனக்குள்ள அன்புந்**

**தாராய் அருளளியத் தணியா தொல்லை வந்தருளித்**

**தளிர்ப்பொற் பாதந் தாராயே. 08**

"சிவனே, உனது அடியார்கள் முற்றிலும் பக்குவப்பட்டவர்கள். அதனால் அவர்கள் எல்லோரும் உன்னை இடையறாது வணங்குகின்றனர். ஆனால் நான் உன்னை உணராமையால் பக்குவப்படாதவன். அதனால் என்னை உன் மெய்யடியராக்கிப் பக்குவப்படுத்துவாயாக."

**தாரா அருளொன் றின்றியே தந்தாய் என்றுன் தமரெல்லாம்**

**ஆரா நின்றார் அடியேனும் அயலார் போல அயர்வேனோ**

**சீரார் அருளாற் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா**

**பேரா னந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே. 09**

"சிவனே, உன் அடியார்களுக்கு அருளைத் தாராளமாக அள்ளி வழங்கியுள்ளதால் அவர்கள் அதில் திளைத்து மிக்க மகிழ்வுடன் இருக்கின்றனர். அப்படியிருக்க என்னைப் புறக்கணித்துவிட்டாய். இது முறையோ? எனது மனதைச் சுத்தப்படுத்தி என்னையும் உனது நிலைத்த அருளுக்கு உட்படுத்து" என்று மாணிக்கவாசகர் வேண்டுகிறார்.

**மானோர் பங்கா வந்திப்பார் மதுரக் கனியே மனநெகா**

**நானோர் தோளாச் சுரையொத்தால் நம்பி இத்தால்**

**வாழ்ந்தாயே ஊனே புகுந்த உனையுணர்ந்த உருகிப்**

**பெருகும் உள்ளத்தைக் கோனே அருளுங் காலந்தான்**

**கொடியேற் கென்றோ கூடுவதே 10**

“சிவனே, நான் எதற்கும் உதவாதவன் என்றும், செயற்பட முடியாதவன் என்று நீ புறக்கணிப்பாயேயானால் அது உனது பேரருளுக்கு இழுக்காகாதா? அதனால் என்னை உன் மெய்யடியனாக்கு” என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**கூடிக்கூடி உன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா**
**வாடி வாடி வழியற்றேன் வற்றல் மரம்போல் நிற்பேனோ**
**ஊடி ஊடி உடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்கு**
**ஆடிஆடி ஆனந்தம் அதுவே யாக அருள்கலந்தே. 11**

“சிவனே, உனது அன்பர்கள் உன்னோடு கூடிக் கூடிப் பேரின்பத்தை எப்போதும் அனுபவிக்கின்றனர். நான் மட்டும் காய்ந்த மரக்கட்டைபோன்று அசைவின்றி, உணர்வின்றி வாழ்வதா..? நானும் உனது அடியவன் தானே அதனால் என்னையும் உன்னோடு சேர்த்துவிடு. நானும் உன்னடியாரைப்போலக் கூடிக் கூடி, ஊடி ஊடி, ஆடிப்பாடி ஆனந்தமடைய வேண்டும் அதற்கு ஆவன செய்” என்று மாணிக்கவாசகர் கெஞ்சுகிறார்.

*திருச்சிற்றம்பலம்.*